Majlis Ugama Islam Singapura
(Islamic Religious Council of Singapore)

National Environment Agency
Safeguard • Nurture • Cherish

# நினைவூட்டல் அறிவிப்பு
# சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டின் உள்ளே 23, 24, 25, 26, N-429, N-1-1, N-1-2 ஆகிய புளோக்குகளில் இருக்கும் கல்லறைகள் தோண்டியெடுப்பு (கட்டம் 10)

## முதன்மை கல்லறைகள்

- சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் கல்லறைகளைத் தோண்டியெடுக்கும் பணியின் 10-ஆம் கட்டப் பதிவு 10 ஜூன் 2025 அன்று அறிவிக்கப்பட்டு, தற்போது நடைபெற்று வருகிறது.
- 23, 24, 25, 26, N-429, N-1-1, N-1-2 ஆகிய புளோக்குகளில் அடக்கம் செய்யப்பட்டுள்ள உறவினர்களின் ("காலமான முதன்மை உறவினர்") பிரேதச்சிதைவுகளைக் கோர குடும்ப உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.
- குடும்ப உறுப்பினர்கள் **சிங்பாஸ்** பயன்படுத்தி **www.pusara.sg** இணையத்தளத்தில் பதிவு செய்யலாம் அல்லது விவரம் கேட்டறிய **6238 4504** என்ற எண்ணை அழைக்கலாம்.
- இந்த அறிவிப்பு, 9 ஜூன் 2026 அன்று முடிவடையும் பதிவுக்கான இறுதி நினைவூட்டலாகும்.

## துணைக் கல்லறைகள்

- குடும்ப உறுப்பினர்கள் 23, 24, 25, 26, N-429, N-1-1, N-1-2 ஆகிய புளோக்குகளுக்கு வெளியில் உள்ள கல்லறைகளில் அடக்கம் செய்யப்பட்ட மற்ற குடும்ப உறுப்பினர்களின் ("காலமான துணை உறவினர்") பிரேதச்சிதைவுகளையும் கோர அனுமதிக்கப்படும். ஆனால் அவை, 9 ஜூன் 2026 தேதிக்குமுன் குறைந்தது 15 ஆண்டுகளுக்கு சுவா சூ காங் முஸ்லிம் இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- கோரப்படும் துணைக் கல்லறைகளின் பட்டியல் பொதுமக்களிடம் தெரியப்படுத்தப்படும். அந்தப் பட்டியல் கீழ்க்காணும் அட்டவணையில் உள்ளபடி இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். பட்டியலில் உள்ள கோரிக்கைகளுக்குக் குடும்ப உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவிக்கலாம். அனைத்து எதிர்ப்புகளும் முறையே 23 மே 2026 மற்றும் 30 ஜூன் 2026 தேதிக்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும். இந்தத் தேதிகளுக்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் எதிர்ப்புகள் ஏற்கப்படமாட்டாது. முழுப் பட்டியலை www.pusara.sg இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

| S/N | துணைக் கல்லறைகளைக் கோருவதாகப் பதிவு செய்யப்பட்ட தேதி | இறந்தவரின் பட்டியல் பதிவேற்றம் செய்யப்படும் தேதி | எதிர்ப்பைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் |
|---|---|---|---|
| 1 | 10 ஜூன் 2025 தேதிக்கும் 27 மார்ச் 2026 தேதிக்கும் இடையில் | 9 மே 2026 | 23 மே 2026 |
| 2 | 28 மார்ச் 2026 தேதிக்கும் 9 ஜூன் 2026 தேதிக்கும் இடையில் | 16 ஜூன் 2026 | 30 ஜூன் 2026 |

- குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்திடம் (முயிஸ்) எழுத்துபூர்வமாக எதிர்ப்பு தெரிவித்தால், துணைக் கல்லறைகள் தோண்டியெடுக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும். துணைக் கல்லறைகளைத் தோண்டியெடுப்பதற்கு எதிரான எதிர்ப்பை www.pusara.sg இணையத்தளத்தில் சமர்ப்பிக்கலாம்.
- மேல்விவரங்களுக்கு, அன்புகூர்ந்து **6238 4504** என்ற எண்ணில் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது info@pusara.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்